**மீரிகம பிரதேச சபை**

**-----------------------**

**கம்பஹா மாவட்டம்**

**-------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

---------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

-------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 29 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மீரிகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த வருடத்தில் சென்மதியாளர் மீதி அதிகளவான ஒதுக்கம் செய்யப்பட்டதாலும் அத்துடன் நிறுத்தப்பட்ட திட்டங்கள் சம்மந்தமான ஒதுக்கம் ஆகியவற்றின் கூட்டுமொத்த தொகை ரூபா 25,203,362 பெறுமதியான தொகை சென்மதியாளர் கணக்கு மீதியுடன் பதிவளிப்பு செய்யும் போது பொது நாட்குறிப்பேடு இலக்கம் 26 படி ரூபா 43,349,700 பெறுமதி பதியப்பபட்டதால் ரூபா 18,146,338 பெறுமதியானவை சென்மதியாளர் மீதி குறைவாகவும் திரண்டநிதி அதிகரித்தும் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி அதிகளவு ஒதுக்கம் செய்யப்பட்டதாலும் மற்றும் நிறுத்தப்பட்ட திட்டங்களுக்கான ஒதுக்கங்களின் கூட்டுமொத்த தொகை ரூபா 25,203,362 பெறுமதியானவை மூலதன பெறுகைகள் கணக்கில் இருந்து நீக்கப்படும்போது 43,349,700 ரூபாவாக பதியப்பட்டதனால் கிடைக்க வேண்டிய மூலதன பெறுகைகள் கணக்கு ரூபா 18,146,338 பெறுமதியினாலும் திரண்ட நிதி குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.

(இ) 2014 இல் சென்மதியாளர்கணக்குக்கு ஒதுக்கிவைத்த திட்டத்திற்கு கொடுப்பனவு செய்யும் போது சென்மதியாளர் கணக்குகளில் செலவு வைத்தமையாலும் 2015 வருடத்தில் சென்மதியாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு ரூபா 47,732 பெறுமதி மற்றும் வைப்புக் கணக்கில் ரூபா 69,868 கொடுப்பனவு செய்வதற்காகவும் பொதுநாட்குறிப்பேடு இலக்கம் 29 ப்படி திரண்ட நிதிகணக்கு வரவு வைத்து சென்மதியாளர் கணக்குக்கு செலவு வைக்கப்பட்டமையால் பல்வேறு வகையான சென்மதியாளர்கள் கணக்குக்கு செலவு வைத்தமையால் சென்மதியாளர் கணக்கு ரூபா 235,200 கூடுதலாகவும் திரண்டநிதிக் கணக்கு ரூபா 117,599 குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) கப் வாகனத்தின் காப்புறுதி செய்த பெறுமதியை கணக்கு வைக்கப்பட்டமையை திருத்தம் செய்வதற்கு பொதுநாட்குறிப்பேடு இலக்கம் 02 இல் ரூபா 4,174,909 மோட்டார் வாகன

வண்டிக் கணக்குக்கு செலவு வைக்கப்பட்டு மொத்த ஆக்கப்பொருள் கணக்கு வரவு வைக்கப்பட்டமையால் ரூபா 353,133 பெறுமதியானவை இரண்டிலும் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 10,615,690 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 32,151,625 ஆக விளைந்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

சபையினான் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டில் மதிப்படப்பட்ட வருமானம், உண்மையான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|
| ஆதனவரி | 16இ866 | 13இ957 | 9இ725 |
| வாடகைகள் | 6இ416 | 6இ046 | 655 |
| உரிமங்கள் | 511 | 511 | 71 |

#### 2.2.2 ஆதனவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒரு வருடத்திற்கு மேலான ரூபா 10,000 க்கு கூடுதலாக கிடைத்த ஆதனவரி 39 எண்ணிக்கையில் கிடைக்கவேண்டிய ஆதனவரி நிலுவை ரூபா 2,145,343 அறவிடுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசம்பர் 31 திகதிக்கு கிடைக்கவேண்டிய ஆதனவரி நிலுவை ரூபா 8,976,141 இல் 3-5 வருடங்களுக்கு கிடைக்கவேண்டிய ஆதனவரி நிலுவை ரூபா 4,352,065 பெறுமதியும் 5 வருடங்களுக்கு மேலான கிடைக்க வேண்டிய ஆதனவரி நிலுவை ரூபா 757,642 காணப்பட்டுள்ளன.

(இ) 1987 ம் ஆண்டு 15 இலக்கப் பிரதேச சபை சட்டத்தின் 134(1) ம் பந்தியின் பிரகாரம் 2008 செப்தெம்பர 5 ம் திகதிய வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட அபிவிருத்திஅடைந்த கிராமங்கள் பட்டியலில் உடககா உப அலுவலகம்,பல்லேவல உப அலுவலகத்திற்கு சொந்தமான 23 பிரதேசங்கள் இனங்காணப்பட்டவற்றில் புதிய ஆதனவரி எண்ணிக்கை 8249 ற்கும் அரசாங்கத்தில் முறையான விலை மதிப்பீடு எடுக்கும் வரை சபையினால் தற்காலிக விலை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதன வரி அறவிட ஏற்பாடு செய்யப்படாமையால் பல வருடத்திற்கு மேலாக இன்றுவரை அதிகளவான வருமானம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 1987 இலக்கம் 15 பிரதேச சபை சட்டம் 134 ம் பந்தியின் பிரகாரம் மற்றும் 2008 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய மேல் மாகாண உள;ராட்சி ஆணையாளரின் WP/LPD/10/2008 இலக்க

சுற்றறிக்கை 4 (ஆ) பந்தியின் பிரகாரம் உள்;ராட்சி நிறுவனங்களுக்கு ஆகக்கூடிய ஆதனவரி அறவீட்டிற்காக அபிவிருத்தியடைந்த கிராமங்கள் இனங்காணப்பட்டு வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும் என அறிவித்திருந்த போதும் எவ்வாறான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கடை வாடகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீரிகம உப அலுவலகத்திற்கு சொந்தமான புதிய பொதுச்சந்தையில் உள்ள 15 கடைகளில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்கவேண்டிய கடைவாடகை ரூபா 30,600 2 ½ வருடத்திற்கு மேலாகவும், மற்றும் மைதானத்திற்கு முன் இலக்கம் 13 கடையில் 30 மாதத்திற்கு ரூபா 30,000 கிடைக்கவேண்டியுள்ளன.

(ஆ) இலக்கம் 8,9,16 மற்றும் 25 ஆகிய கடைகளுக்கு சொந்தமான ரூபா 97,500 கடை வாடகை இரு வருடத்திற்கு மேலாக கிடைக்கவேண்டியுள்ளன.

### 2.2.4 உரிமங்கள்

பல்லேவெல உப அலுவலகத்தில் 2014/2015 வியாபார உரிம பதிவேட்டின்படி 2012,2013 வருடங்களுக்காக உரிமங்கள் அறவிடவேண்டிய 135 கடைகளில் ரூபா 136,585 பெறுமதி அறவிடப்பட வேண்டும் கணக்காய்வில் இருந்த போதிலும் அத்தொகை கணக்காய்வுத் திகதி 2015 நவம்பர் 23 ஆந் திகதி வரை அறவிட எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணம்

சிறிலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 இலக்க விசேட சுற்றறிக்கையினை அடிப்படையாக கொண்டு சபை உப சட்டத்தினை உருவாக்க தீர்மானம் எடுக்கப்பட்டு சபை எல்லைக்குள் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களை இனங்கண்டு அதனை வர்த்தகமானியில் பிரசுறித்து சரியான கட்டணங்கள் அறவிடுவதற்கு போதுமான அளவு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.6 சூழல் அனுமதிப்பத்திரங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் கடந்த இரு வருட காலப்பகுதியில் 19 சூழல் அனுமதிகள் மட்டும் வழங்கப்டிருந்தமை குறைவாக உள்ளது. உப அலுவலகத்தில் உள்ள அனுமதிப் பதிவேட்டினை பார்க்கும்போது கட்டாயமாக சூழல் அனுமதிகள்எடுக்கவேண்டிய கைத்தொழில்கள் அவ் அனுமதிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 ஜனவரி 25 ஆம் திகதிய 1533∴10 இலக்க வர்த்தகமானிப்படி 23 (அ) பந்திப்பிரகாரம் சூழல் அனுமதி பத்திரங்களின் வருமானம் எடுப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் கொடுத்தருந்த போதிலும் பிரதேச சபையினால் சூழல் அனுமதிகள்எடுக்கவேண்டிய கைத்தொழில்கள் பற்றி கணக்கெடுப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரைக்கும் சபையினால் வழங்கப்பட்ட சூழல் அனுமதிகளினை உப அலுவலகங்களில் உள்ள 2014∴2015 வருடத்திற்கான அனுமதிகள் மற்றும் கைத்தொழில்கள் பார்க்கும் போது 1980 இலக்கம் 47 சூழலியல் சட்டம் மற்றும் மேற்படி வர்தமானிப்பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் 2014∴2015 வருடத்திற்காக 307 சூழல் அனுமதிகளிற்கு ரூபா 1,252,000 வருமானம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 4,999,500 பெறுமதியான பக்கோ லோடர் (ர்ழடயனெ) இரு வருடத்தில் இருந்து பயன்படுத்தப்படாமல் இருந்தது. தற்போது இப் பக்கோ லோடர் திருத்தத்திற்கும் அல்லது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் சபைக் கட்டிடத்திற்கு வெளியே துருப்பிடித்து செல்கின்றமை பற்றி 2016 ஏப்ரல் 1ம் திகதி பௌதீக கணக்காய்வு பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

(ஆ) சபைக்கு சொந்தமான ரூபா 38,750 பெறுமதியான குவோட்டா லான்ட் மாஸ்ரருக்கு பெட்டி இல்லாதமையால் ஒரு வருடத்தில் இருந்து பாவிக்காமல் சபைக் கட்டிடத்திற்கு வெளியே துருப்பிடித்துக் காணப்பட்டுள்ளது.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.

சபையில் அனுமதிக்கப்பட்ட மனித வளங்களில் 3 காவலாளி ஆளணிக்கான வெற்றிடம் காணப்பட்டு அவற்றினை நிரப்பப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் இருந்து பாதுகாப்பு சேவைக்காக தனியார் பாதுகாப்பு சேவைக்கு 2015 ஜனவரியில் இருந்து செப்தெம்பர் வரை ரூபா 975,658 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

2015 ம் வருடத்தில் 3 நூலகத்தில் செய்யப்பட்ட இருப்பு கணக்கெடுப்பு சபை அறிக்கைப்படி ரூபா 49,588 பெறுமதியான 307 புத்தகங்கள் காணப்படாமலும் மற்றும் பாவிக்க முடியாது ரூபா 21,589 பெறுமதியான 302 புத்தகங்களும் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### 3.4.1 செயற்திட்ட தாமதம்

மீளாய்வாண்டில் ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்ட காலப்பகுதியில் முடிவடையாத ரூபா 5,476,798 பெறுமதியான 13 வேலைத்திட்டங்களும், ஒப்பந்தம் கைச்சாத்திடாத ரூபா 1,213,325 பெறுமதியான 4 வேலைத்திட்டமும் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தொடங்குவதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை சபையில் நிதிப்பற்றாக்குறை காரணமாக இவ் வேலைத்திட்டங்கள் எதிர் வரும் வருடத்தில் செய்வதற்கான நடவடிக்கை எடுக்காமல் அவ் வேலைத்திட்டங்கள் முடிவுறுத்தல் செய்வதற்கு தீர்மானம் எடுத்தாக செயலாளர் 2016 மே 19 ஆம் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

#### 3.4.2 மீரிகம நூலக கட்டிட நிர்மானம்

2013 ம் வருடத்தில் இலகு நிதி மூலமாக ரூபா 13.6 மில்லியன் அனுமதிக்கப்பட்ட மீரிகம நூலக கட்டிடம் கட்டுதல் சம்மந்தமாக 2016 ஏப்ரல் 14 ஆம் திகதி செய்யப்பட்ட பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(i) மேல் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தினால் 2013 யூன் 26 ஆம் திகதிய இலக்க 26.'.என்ஏ.'.2013 ஆகிய பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) அவரின் கடிதப்படி 2013 இலகு நிதி ல் உள்ளதாக நூலக கட்டிடத்திற்கு ரூபா 13.6 மில்லியன் அனுமதிக்கப்பட்டுள்ளது பற்றியும் அவ் வேலைத்திட்டம் 2013 வருடத்தில் கட்டாயம் முடிவுறுத்தப்படவேண்டும் என்பது பற்றியும் மற்றும் அடுத்த வருடத்திற்கு கொண்டு செல்லாமல் முடிவுறுத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் 2013 நவம்பர் 30 க்கு முன்னால் ஒப்பந்தம் செய்யப்படவேண்டும்

என அறிவுறித்தி இருந்தது. ஆனாலும் இவ் வேலைத்திட்டம் 2013 வருடத்தில் மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவை நியமித்து அவர்களால் ரூபா 16,661,400 ( பெறுமதிசேர் நீங்கலாக) பெறுமதிக்கு ஒப்பந்தம் மட்டும் செய்திருந்தனர்.

(ii) மேற்படி கட்டிடத்திற்கான நிலத்தில் உள்ள மண் சரியில்லாத காரணத்தால் பொருத்தமான வேறு வழி வகைகள் செய்ய வேண்டும் என்று பிராந்திய பொறியியலாளர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு 2014 மே 2ம் திகதி அறிவித்திருந்தார் அதற்காக 2014 யூன் 19 ஆம் திகதி சிஎஸ்ஓ.்.இன்ஜி.்.1.்.8.்.15 இலக்க ஆகிய பிரதம செயலாளர் அலுவலகத்தில் மேல் மாகாண பிரதி பிரதம செயலாளர் (பொறியியல்) அவரின் கடிதத்தின்படி இதற்காக ரூபா 2,000,000 மேலதிக செலவாகும் என அறிவித்திருந்தது.

(iii) புதிய மீளாய்வு செய்த கிரய மதிப்பீடு ரூபா 27,000,000 ஆகும். 2014 வருடத்தில் இதன் 2 வது நிலுவையின் ரூபா 9,000,000 பெறுமதியானது அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவ் வேலைத்திட்டம் 2014 ல் முடிக்கப்பட வேண்டும் என அறிவித்திருந்தது.

(iv) Eலக கட்டிடத்திற்காக ஒப்பந்தம் செய்த பெறுமதி ரூபா 21,172,789 இருந்தது 2016 பெப்ரவரி 16ம் திகதி வரைக்கும் ஒப்பந்ததாரருக்கு ரூபா 20,538,865 கொடுப்பனவு செய்திருந்தனர் 2015 ம் வருடத்தில் நிதிச்சொத்து பதிவுப்பட்டிருந்தது. 1 வது, 2 வது நிலை நூலக கட்டிடத்திற்காக ரூபா 26,215,965 செலவு செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ள போதும் மேல் உள்ள செலவு இல்லாமல் மிகுதி செலவினை பற்றியும் எந்தவிதமான தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஜே.சி.பி பக்கோ 2014 ஜனவரி 16ந் திகதியில் இருந்து 2016 ஏப்ரல் 1ம் திகதி கணக்காய்வு திகதி வரைக்கும் பழுதடைந்து காணப்பட்டிருந்தது. அது பல தடவைகள் முறை கேடாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இதனால் முறையாக திருத்தம் செய்வதற்கு முகாமையால் நடவடிக்கையெடுக்கப்படாமல் இருந்தது இவ் பக்கோ 1 ½ வருட காலமாக திருத்தம் செய்யாமல் கராச்சில் கொடுக்கப்பட்டிருந்தது. சபை வேலைக்கு 2014,2015 வருடத்தில் முறையே ரூபா 751,750 மற்றும் 1,565,520 கூட்டுமொத்த தொகை ரூபா 2,317,270 பெறுமதியான கூலிப்பணம் கொடுத்து வாடகை அடிப்படையில் ஜே.சி.பி இயந்திரம் பெற்றிருந்தது.

(ஆ) பிரதேச சபைக்கு சொந்தமான நன்கொடையாக கிடைத்த தண்ணீர் தாங்கி,பக்கோ லோடர் ,ரோளர் (தொன்08) மற்றும் மோட்டார் கிறைண்டர் இருந்தபோதிலும் 44 தொழிலாளரும் தொழில் நுட்பஉத்தியோகத்தர் 5 பேரும் இருந்த போதும் இவ்வகையான வளங்களை பயன்படுத்தாது 2015 வருடத்தில் ரூபா 6,027,270 பெறுமதியான 21 சபை ஒப்பந்த வேலைகள் மூன்றாம் தரப்பு ஒப்பந்தகாரருக்கு கொடுத்து செய்திருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 371 ன்படி ஒரு வேலை முடிவடைந்த உடனே கட்டுநிதி மீள்நிரப்பபடவேண்டிய போதிலும் சபையினால் கொடுக்கப்பட்ட முற்பணம் 5 வருடங்களுக்கு மேலாக 101 எண்ணிக்கையான ரூபா 6,108,841 வையும் 3 வருடத்திற்கு மேலான 26 எண்ணிக்கையான ரூபா 158,181 பெறுமதியானதும் மற்றும் 1 வருடத்திற்கு மேலாக 4 எண்ணிக்கையான ரூபா 130,000 சம்மந்தமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 காணி பிரித்தல்

2015 மார்ச் மாதத்தில் விற்கப்பட்ட தன்வலவந்த அல்லது ஆந்தாகலவத்த பெயருடைய காணிபிரித்தலுக்காக ரூபா 601,447வரி அறவிட இருந்தது. இதற்காக பின்வரும விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(i) இந்தக் காணிக்கு சொந்தமான 1 ம் உறுதியும், இலக்கம் 6170 யு ஆகிய திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 601,447 வரி அறவீட்டிற்காக உள்ள உப பேரேடுகள் கணக்காய்வின்படி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 மார்ச் 24 ஆம் திகதி வேவல் தெனிய உப அலுவலகத்தில் பணி புரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கை படி நிலத்தின் அபிவிருத்திக்காக 7 மாற்றங்கள் செய்த பின்னர் காணித்துண்டுகள் விற்பனைக்கு அனுமதி பெறவேண்டுமென இருந்தபோதும். அந்த மாற்றங்கள் செய்யப்படாமல் இருந்தது.

(iv) தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கைப்படி காணியில் பொது வசதிக்காக சபைக்கு எடுக்கப்படவேண்டிய 94 பேச்சர் க்கு உள்ள காணி சபைக்கு உரிமை மாற்றம் செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் 2016 ஏப்ரல் 4 ஆம் திகதி வரை செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) இந்தக்காணிக்காக திட்டமிடல் குழுவினால் அனுமதிப்பதற்கு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்மக்கழிவு திட்டத்தினை புதிய இடத்தில் செய்வதற்கு மீளாய்வாண்டில் ரூபா 5,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் அந்த நோக்கிற்கு அவ் ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் தினமும் 08 தொன் குப்பைகள் சேர்க்கப்படுகின்றது. அக்குப்பைகளை பிரித்தெடுப்பதற்கும், குப்பைகளை பிரட்டுதல், குப்பைகளை குவித்தல் ஆகிய வேலைகள் செய்வதற்கும் இடம் பற்றாக்குறை, இயந்திரம் (டீழுடீ ஊயவ ீடயவ) ஆகியன பற்றாக்குறையாக காணப்பட்டதால் கூட்டெரு தயாரிக்கும் இடத்தில் இல்லை என அவதானிக்கப்பட்டுள்ளது. திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்திற்காக 2015 வருடத்தில் ஒதுக்கீடு பண்ணிய நிதியில் ரூபா 792,284 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மீதியாக காணப்பட்டபோது இத்திட்டத்தில் உற்பத்தித்திறனை கூட்டுவதற்கு தேவையான நடவடிக்கை சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை..

**3.8 சூழல் பாதிப்பு**

தனியார் கம்பனியால் நாவுலுவ,பஸ்யாலு பிரதேசங்களின் பிரதான வீதிக்கு அருகில் உள்ள காணிகளில் நிர்மானிக்கப்பட்ட குப்பை அழிக்கும் பிரிவுகளில் வெளிவரும் உடல் பாதிப்பை ஏற்படுத்தும் பொலுத்தீன் புகை பற்றி பிரதேச மக்கள் 06 மாதத்திற்கு மேல் இருந்து பிரதேச சபைக்கு அறிவித்திருந்த போதும் 2016 ஏப்ரல் 05 கணகாய்வு திகதி வரை இவ் சூழல் பிரச்சினைக்காக இறுதிமுடிவை எடுப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2015 ஒக்டோபர் 19 ந் திகதி மத்திய சூழல் அதிகார சபைக்கு இது பற்றி அறிவித்துள்ளதாக 2016 மே மாதத்தில் செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---------------------------------------------------------

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமானக் கட்டுப்பாடு
(ஈ) சொத்து முகாமைத்துவம்.